1991 செப்டம்பர் 18] [பேரவைத் தலைவர்]

திரு. ரவிக்குமார் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்த உணர்வு எல்லா உறுப்பினர்களுடைய உணர்வு என்பதை இந்த அவையின் மூலம் தெரிவித்து, இதுபோன்ற நிகழ்வுகள் எதிர்காலத்தில் நிகழா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசை அவையின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. தருமலிங்கம், பொது நிறுவனங்களின் குழுவின் தலைவர்.

முற்பகல் 10-15

திரு. கி. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் 1982-83 மற்றும், 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) தமிழ்நாடு மின் வாரியம் (காடம்பாறை நீரேற்று புனல் மின் திட்டம் தொடர்பான பத்திகள் மீதான குழுவின் நான்காவது அறிக்கை மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1984-85 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (சிவில்) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை தொடர்பான பத்திகள் மீதான குழுவின் ஐந்தாவது அறிக்கை ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

4. மானியக் கோரிக்கைகள், 1991-92—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண் 32 —பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

மானியக் கோரிக்கை எண் 32— பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதலியோர் நலன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.